# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF : SUBORDINATE JUDGE'S COURT, SIVAGANGAI.

Original Suit : **OS 378/2023** Plaintiff :

Deposition of Witness of Defendant: DW 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு. சப்பாணி முத்து | District | : | |
| Father/ Husband name | : | திரு. ரங்கன் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 2573 of the day of 10.03.2026

**<u>முதல் விசாரணை:</u>**

நான் இந்த வழக்கின் 8 ஆம் பிரதிவாதி மற்றும் 7,8 பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சி ஆவேன். என்னுடைய சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.

1. 31.12.1985 ஆம் தேதிய தாவா சொத்து உள்ளிட்ட சொத்துகளுக்கு 8 ஆம் பிரதிவாதி தகப்பனார் ரங்கன் பெயரில் ஏற்பட்ட 443 நம்பர் நில உடைமை பதிவு மேம்பாட்டு திட்ட பட்டா **அசல்** பிவாசா ஆ 1 ஆகும்.

2. 04.09.2023 ஆம் தேதிய ரங்கன் பெயரில் உள்ள 443 நம்பர் பட்டாவிற்கு உரிய 10(1 ) **கணினி நகல்** பிவாசா ஆ 2 ஆகும்.

3. 28.07.2025 ஆம் தேதிய 3,4,5 பிரதிவாதிகளின் தகப்பானார் பெயரில் உள்ள 89 ஆம் நம்பர் பட்டாவிற்கு உரிய 10(1) **கணினி நகல்** பிவாசா ஆ 3 ஆகும்.

4. 28.07.2025 ஆம் தேதிய 11,12,13,14 பிரதிவாதிகளின் தகப்பானார் பெயரில் உள்ள 287 ஆம் நம்பர் பட்டாவிற்கு உரிய 10(1) **கணினி நகல்** பிவாசா ஆ 4 ஆகும்.

5. 29.07.2025 ஆம் தேதிய 2 ஆம் வாதி பெயரில் உள்ள 35 72 ஆம் நம்பர் பட்டாவிற்கு உரிய 10 (1) **கணினி நகல்** பிவாசா ஆ 5 ஆகும்.

6. 28.07.2025 ஆம் தேதிய சப்பாணி கோனார் பெயரில் உள்ள 10 (1) **கணினி நகல்** பிவாசா ஆ 6 ஆகும்.

<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

என்னுடைய அப்பா பெயர் ரங்கன் என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு 6 முதல் 9 பிரதிவாதிகள் வாரிசுதாரர்கள் என்றால் சரிதான். எனது அப்பாவின் தந்தை சப்பாணிகோனார் என்றால் சரிதான். மேற்படி சப்பாணிகோனாருக்கு கருப்பையா, ரங்கன், நாராயணன், பஞ்சவர்ணம், ரங்கம்மாள் , மூக்கையா ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான். எனது அய்யா சப்பாணிகோனாருக்கு 4 ஆண் வாரிசுகளும் 2 பெண் வாரிசுகள் என்றால் சரிதான். மேற்சொன்ன பெண் வாரிசுகளில் பஞ்சவர்ணம் என்பவர் தான் தாவா வழக்கின் 1 ஆம் பிரதிவாதி என்றால் சரிதான். சப்பாணி கோனாரின் மற்றொரு மகளான ரங்கம்மாள் இறந்துவிட்டார் என்றால் சரிதான். ரங்கம்மாளின் கணவர் பெயர் கைலாசம் என்றால் சரிதான். ரங்கமாளுக்கும் கைலாசத்திற்கும் பிள்ளைகள் இல்லை என்றால் சரிதான். சப்பாணி கோனாரின் கடைசி மகன் தாவா வழக்கின் 1 ஆம் வாதி மூக்கையா கோனார் என்றால் சரிதான். மூக்கையா கோனாரின் மக்கள் தான் 2 முதல் 4 வாதிகள் என்றால் சரிதான். சப்பாணிக்கோனாரின் முதல் மகன் கருப்பையாவின் மனைவி பெயர் 2 ஆம் பிரதிவாதி கருப்பாயி என்றால் சரிதான். கருப்பையா உயிரோடு உள்ளரா என்றால் இறந்து விட்டார். கருப்பையா மற்றும் கருப்பாயி வாரிசுதாரர்கள் 3 முதல் 5 பிரதிவாதிகள் என்றால் சரிதான். சப்பாணிகோனாரின் 2 வது மகன் ரங்கன் என்றால் சரிதான். ரங்கன் இறந்துவிட்டார். ரங்கனின் வாரிசுதாரர்கள் 6 முதல் 9 பிரதிவாதிகள் என்றால் சரிதான். சப்பாணிகோனாரின் 3 வது மகன் நாராயணன் என்றால் சரிதான். நாராயணன் இறந்துவிட்டார். நாராயணன் வாரிசுதாரர்கள் 10 முதல் 14 பிரதிவாதிகள் என்றால் சரிதான். எனது அய்யா சப்பாணி கோனாருக்கு எவ்வளவு நஞ்சை , புஞ்சை நிலங்கள் இருந்தன என்றால் 4 ¾ ஏக்கர் நஞ்சையும் 8 ஏக்கர் புஞ்சையும் இருந்தது. தாவா வழக்கு சொத்துக்கள் இரண்டும் புஞ்சைகள் என்றால் சரிதான். எனது அய்யா சப்பாணிக்கோனார் உயிரோடு இருக்கும் வரை அவரும் அவரது 4 ஆண் மக்களும் ஒன்றாக ஒரே கூட்டு குடும்பமாக வசித்து வந்தார்களா என்றால் இல்லை. எனது அய்யா சப்பாணிக்கோனார் 1990 ஆம் வருடம் இறந்து விட்டார் என்றால் சரிதான். சப்பாணி கோனார் உயிரோடு இருந்தபோது பொது குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட 4 ¾ ஏக்கர் நஞ்சை நிலங்களை அவரது 4 ஆண் மக்களுக்கும் 1970 ல் பாகம் பிரித்து

கொடுத்துவிட்டாரா என்றால் பிரித்து கொடுத்துவிட்டார். 1970 ல் பாகம் பிரித்த போது பெண் வாரிசுதாரர்களுக்கு பாகம் பிரித்து கொடுத்தாரா என்றால் இல்லை. 1970 ஆம் வருடம் எனது அய்யா சப்பாணிக்கோனார் பாகம் பிரித்து கொடுத்த விபரம் அவரது பெண் மக்களுக்கு தெரியும் என்றால் சரிதான். மேற்படி பாகம் பிரித்த போது தங்களுக்கு பாகம் வேண்டும் என பெண் மக்கள் இருவரும் கேட்கவில்லை என்றால் சரிதான். பெண் மக்கள் இருவரும் எங்கள் குடும்ப சொத்துக்களை அனுபவம் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி பாக பிரிவினையின் போது எனது அய்யாவிற்கு சொத்து ஏதேனும் பாகம் கொடுக்கப்பட்டதா என்றால் பட்டா எண் 169 ல் விஸ்தீரணம் 69 செண்ட் நஞ்சை நிலம் அவர் பாகமாக கொடுக்கப்பட்டது. 1970 ல் பாகம் பிரித்த போது புஞ்சை நிலங்களை பாகம் பிரித்தார்களா என்றால் அதற்கு முன்பாகவே நான் பிறப்பதற்கு முன் புஞ்சை நிலங்களை பாகம் பிரித்து கொண்டார்கள். புஞ்சை நிலங்களில் யார் யாருக்கு எவ்வளவு பாகம் எந்த சொத்துக்களை பொறுத்து பிரித்து கொடுக்கப்பட்டது என எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனது அய்யா சப்பாணிக்கோனாருக்கு பாகம் கொடுக்கப்பட்ட 69 செண்ட் நஞ்சை நிலத்தினை பொருத்து உயிலோ அல்லது வேறு ஆவணங்கள் எதுவும் சப்பாணிக்கோனார் உயிரோடு இருந்த வரை எழுதிக் கொடுத்தாரா என்றால் இல்லை. மேற்படி 69 செண்ட் நிலமானது சப்பாணிக்கோனார் இறப்பிற்கு பின்பு பாகம் ஏதும் பிரிக்கப்பட்டதா என்றால் 4 ஆண் மக்களுக்கும் பாகம் பிரிக்கப்பட்டது 1990 ஆம் வருடமா அல்லது 1992 ஆம் வருடமா என தெரியவில்லை. யார்யாருக்கு எந்த பக்கம் உள்ள சொத்து எவ்வளவு விஸ்தீரணத்தில் பிரித்து கொடுக்கப்பட்டது என்றால் ரங்கனுக்கு வடக்கில் இருந்து 1 ஆவது சொத்து , கருப்பையாவிற்கு மேற்படி 1 ஆவது சொத்திற்கு தென்புறம் உள்ள சொத்தும் அதற்கு அடுத்த தென்புறம் உள்ள சொத்து நாராயணனுக்கும் அதற்கு அடுத்த தென்புறம் உள்ள சொத்து மூக்கையாவிற்கும் பாகம் பிரித்து கொடுக்கப்பட்டது அதற்காக பத்திரம் எழுதிக் கொள்ளவில்லை பட்டாவும் பெயர் மாற்றம் செய்யப்படவில்லை. மேற்சொன்ன 69 செண்டிற்கு தற்போது வரை யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் சப்பாணிக்கோனார் பெயரில் உள்ளது. சப்பாணிக்கோனார் பெயரில் உள்ள சொத்திற்கு யார் வரி செலுத்தி வருகிறார்கள் என்றால் அவரவர் பாகத்திற்கு உரிய சொத்திற்கு வருடத்திற்கு 100 ரூபாய் அல்லது 200 ரூபாய் வரியாக அவரவர் செலுத்தி வருகிறார்கள். மேற்சொன்ன வரி ரசீது தாவா வழக்கில் தாக்கல் செய்யவில்லை

என்றால் சரிதான். சப்பாணிக்கோனார் இறந்த பிறகு அவரது 4 ஆண் மக்களும் சேர்ந்து கோபாலகிருஷ்ணன் என்பவருக்கு 2 ½ ஏக்கர் புஞ்சை நிலத்தினை கிரையம் எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி கிரையம் பெற்ற கோபாலகிருஷ்ணன் அந்த கிரைய சொத்தினை பிளாட்டுகளாக பிரித்து பல நபர்களுக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி 2 ½ ஏக்கர் சொத்தினை எந்த வருடம் கோபாலகிருஷ்ணனுக்கு கிரையம் கொடுக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. கோபாலகிருஷ்ணனுக்கான கிரையமானது பதிவு பத்திரம் மூலம் ஏற்பட்டது என்றால் சரிதான். 4 ஆண் மக்களும் சேர்ந்து கிரையம் கொடுக்கவில்லை தனித்தனியாக தான் கிரையம் கொடுத்தார்கள் . எத்தனை பத்திரம் மூலமாக மேற்படி சொத்து கிரையம் கொடுக்கப்பட்டது என்றால் தெரியாது. கோபாலகிருஷ்ணனுக்கு மேற்படி 2 ½ ஏக்கர் நிலம் கிரையம் கொடுப்பதற்கு முன்பு 4 ஆண் மக்களும் மேற்படி புஞ்சை நிலத்தினை ஒன்றாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். மேற்படி கிரையம் கொடுக்கப்பட்ட 2 ½ ஏக்கர் புஞ்சை நிலத்தினை தவிர எஞ்சியுள்ள நிலங்களை தற்போது வரை 4 ஆண் மக்களும் பொதுவாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் அவரவர்கள் பாகத்திற்கு கிடைத்த சொத்தினை அனுபவம் செய்து வருகிறார்கள். 4 ஆண் மக்கள் ஒவ்வொருவரும் எவ்வளவு பரப்பளவு புஞ்சை நில சொத்தினை அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் தெரியாது. கோபால கிருஷ்ணனுக்கு கிரையம் செய்து கொடுத்த 2 ½ ஏக்கர் புஞ்சை நிலத்தினை தவிர எஞ்சியுள்ள புஞ்சை நிலம் தான் தாவா சொத்து என்றால் சரிதான். மேற் சொன்ன தாவா சொத்திற்கு தற்போது வரை சப்பாணி கோனார் பெயரில் உள்ளது என்றால் இல்லை. யார் பெயரில் தாவா சொத்துக்களுக்கு பட்டா உள்ளது என்றால் 1ஆம் வாதி மூக்கையா பெயரில் உள்ளது. தாவா சொத்துக்களுக்கான அசல் ஆவணங்கள் அனைத்தும் 1ஆம் வாதி மூக்கையா கோனாரிடம் தான் உள்ளது என்ற விபரத்தினை எனது எதிர் வழக்குரையிலும் சாட்சிய நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை . சப்பாணிக்கோனார் இறக்கும் வரை தாவா சொத்துக்களுக்கான அசல் ஆவணங்களை அவருக்கு சொந்தமான இரும்பு பெட்டியில் வைத்திருந்தார் என்றால் சரிதான். சப்பாணிக்கோனார் அவர் இறக்கும் வரை 1ஆம் வாதி மூக்கையா வீட்டில் இருந்தார் என்றால் சரிதான். மற்ற 3 மகன்கள் சப்பாணிகோனாரை பாராமரித்தார்களா என்றால் பராமரித்தார்கள். மாதம் மாதம் பணம் ஏதும் கொடுத்தார்களா என்றால் தெரியாது எனது அப்பா சொன்னார். எனது அப்பா

எங்களுக்கு எந்த வருடம் அவருடைய பாக சொத்துக்களை பாகம் பிரித்து கொடுத்தார் என்றால் 2012 ஆம் வருடம் பிரித்து கொடுத்தார். எனது நிரூபண வாக்குமூலத்தில் எனது அப்பா அவரது வாரிசுகளான 6 முதல் 9 பிரதிவாதிகளுக்கு 2010 ஆம் வருடம் அவரது சொத்துக்களை வாய்மொழி பாகம் பிரித்து கொடுத்துள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதற்கு எழுத்து மூலமான ஆவணங்கள் ஏதும் எழுதி கொடுக்கவில்லை என்றால் சரிதான். எனது அப்பாவிற்கு பாகம் பிரித்து கொடுத்த சமயத்தில் நஞ்சை புஞ்சை நிலம் எவ்வளவு இருந்தது என்றால் நஞ்சை 2 ஏக்கர் புஞ்சை 2 ஏக்கர் இருந்தது. மேற்படி பாக பிரிவினை செய்த போது எனது சகோதரிகளான 6, 7 பிரதிவாதிகளுக்கு பாகம் பிரித்து கொடுக்கவில்லை என்றால் சரிதான். 6 ஆம் பிரதிவாதி பெயர் மது பாண்டி என்றால் சரிதான். 6 ஆம் பிரதிவாதி பெண் ஆவார் என்றால் சரிதான். பெண் பிள்ளைகள் இருவரும் எனது அப்பாவிடம் பாகம் பிரித்த போது தங்களுக்கான பாகத்தினை கேட்டார்களா என்றால் இல்லை. மேற்படி பாகப்பிரிவினை எனது அப்பாவின் பெண் பிள்ளைகள் இருவருக்கும் தெரியுமா என்றால் தெரியும். எந்த மாதம் தேதியில் பாகப்பிரிவினை நடைபெற்றது என்றால் நியாபகம் இல்லை 2010 ல் பாகம் முதலில் பிரிக்கப்பட்டது எனது தம்பி 9 ஆம் பிரதிவாதி தங்கராஜ் அசையும் சொத்துக்களும் தனக்கு வேண்டும் என கேட்டதால் 2012 ல் மீண்டும் பாகம் பிரிக்கப்பட்டது. மேற்படி விபரத்தினை எனது நிரூபண வாக்குமூலத்திலும் எதிர்வழக்குரையிலும் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. மேற்படி பாகப்பிரிவினையின் போது எனது அப்பாவிற்கு பாகம் ஏதும் கொடுக்கவில்லையா என்றால் பாகம் சொத்தும் கொடுக்கவில்லை ஜீவானாம்ச தொகையும் கொடுக்கவில்லை எனது அப்பா எனது பாராமரிப்பில் தான் இருந்தார். அண்ணன் தம்பி நாங்கள் எத்தனை பேர் என்றால் இருவர் மட்டும் ஆவோம் மேற்படி சொத்துக்கள் எங்கள் இருவருக்கு மட்டும் பாகம் பிரித்து கொடுக்கப்பட்டதா என்றால் சரி பங்காக பிரித்து கொடுக்கப்பட்டது. நஞ்சையில் இருவருக்கும் தலா 1 ஏக்கர் கொடுக்கப்பட்டது. புஞ்சை 2 ஏக்கர் முழுவதும் எனக்கு கொடுக்கப்பட்டது. அசையும் சொத்துக்கள் அனைத்து தங்கராஜுக்கு கொடுக்கப்பட்டது. அசையும் சொத்துக்கள் எவை என்றால் 400 செம்பறி ஆடுகள் 10 பசு மாடுகள் ரொக்கம் 5 ½ லட்சம் எனது தம்பிக்கு கொடுக்கப்பட்டது. அவ்வாறு பாகம் பிரித்த போது ஊர் பெரியவர்கள் இருந்தார்களா என்றால் செங்குளத்தினை சேர்ந்த ஜான் பீட்டர் என்பவர் இருந்தார் அவர் இறந்து விட்டார். புதுப்பட்டியை சேர்ந்த அங்குச்சாமி சேர்வை என்ற ஒருவர்

இருந்தாரா என்றால் இருந்தார். மேற்படி நபர் தான் ஊரின் தலைவராக இருந்தது அந்த பகுதி சொத்துக்களை பாகம் பிரித்து கொடுப்பார் என்றால் சரிதான். அங்குச்சாமி சேர்வை எனது அப்பா பாகம் பிரித்து கொடுத்த சமயத்தில் இருந்தாரா என்றால் எனக்கு தெரியாது. எனது அய்யா சப்பாணி கோனார் சொத்துக்களை பாகம் பிரித்து கொடுத்த சமயத்தில் அங்குச்சாமி சேர்வை இருந்தாரா என்றால் இல்லை. சப்பாணி கோனார் பாகம் பிரித்து கொடுத்த சமயத்தில் அசையும் சொத்துக்கள் இருந்ததா என்றால் தெரியாது நான் அப்போது பிறக்கவில்லை. அங்குச்சாமி சேர்வை உயிரோடு உள்ளாரா என்றால் இறந்து விட்டார் எப்போது என்று தெரியாது. எனது அய்யா சப்பாணி கோனார் நஞ்சை நிலங்களை மட்டும் பாகம் பிரித்து கொடுத்துவிட்டு புஞ்சை நிலங்களை பின்னாளில் பிரித்து கொள்ளலாம் எனக் கருதி தனது அனுபவத்தில் வைத்திருந்ததால் நஞ்சை நிலங்கள் பாகப்பிரிவினையின் போது புஞ்சை நிலங்களை பாகத்திற்கு உட்படுத்த வில்லை என்றால் சரியல்ல. மேற்படி புஞ்சை நிலங்கள் பாகம் பிரிக்கப்படாத காரணத்தினால் 4 சகோதரர்களும் சேர்ந்து 2 ½ ஏக்கர் புஞ்சை நிலத்தினை கோபாலகிருஷ்ணன் என்பவருக்கு ஒரே பதிவு கிரைய பத்திரம் மூலமாக கிரையம் எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. எனது அய்யா சப்பாணிகோனார் உயிரோடு இருந்த வரை பாகம் பரிக்கப்பட்ட நிலங்கள் பாகஸ்தர்கள் பேரில் பட்டா ஏற்பட்டு இருந்ததா என்றால் ஏற்பட்டிருந்தது. மேற்படி அசல் பட்டா ஆவணங்கள் எங்கே என்றால் 1 ஆம் வாதி மூக்கையா கோனாரிடம் உள்ளது. மேற்படி பாக நிலங்களுக்கான வரி ரசீதுகளும் மூக்கையா கோனாரிடம் தான் உள்ளது என்றால் சரியல்ல அசல் ஆவணங்கள் மட்டுமே அவரிடம் உள்ளது வரி ரசீதுகள் பாகஸ்தர்களிடம் உள்ளது. எனது அப்பா பாகப்பிரிவினை செய்த பிறகு எங்களுடைய பாக சொத்துக்களுக்கு பட்டா கோரி தனித்தனியாக மனு செய்தோம் என்றால் இல்லை. எங்களுக்கும் மற்றவர்களுக்கும் பட்டா கொடுப்பதற்கு முன்னால் விசாரணை அறிவிப்பு ஏதும் கொடுக்கப்பட்டாதா என்றால் இல்லை. ஏதேனும் விசாரணை நடைபெற்றதா என்றால் இல்லை. பட்டா கொடுக்கப்பட்ட போது வாதிகளுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டதா என்றோ அது சம்பந்தமாக விசாரணை நடை பெற்றதா என்றோ எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது அப்பா பாகம் பிரித்து கொடுத்த பிறகு பாக சொத்துக்களுக்கான பட்டா ஆவணம் எங்களிடம் உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி அசல் பட்டா ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். பிவாசா ஆ 1 ல் சப்பாணி மகன்

என்றுதான் உள்ளது பெயர் குறிப்பிடவில்லை என்றால் பெயர் கீழே உள்ளது. பிவாசா ஆ 2 முதல் பிவாசா ஆ 6 வரையிலான ஆவணங்கள் விசாரணையின்றி வாதிகளுக்கு தெரியாமல் வருவாய் துறை அலுவலர்களின் உடந்தையுடன் தவறாக ஏற்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் தற்போது வரை பாகம் பிரிக்கப்படாமல் பொதுவாக அனுபவம் செய்து வரப்படுகிறது என்றால் சரியல்ல. வாதிகளுக்குரிய பாக சொத்து வாதிகளுக்கு கிடைக்க தக்கது என்றால் சரியல்ல. எனது அப்பாவிற்கும் அவரது ஆண் வாரிசுதாரர்களுக்கும் இடையே நான் சொல்கிற படி எந்த வித பாகப்பிரிவினையும் ஏற்படவில்லை என்றும் அவ்வாறு பாகப்பிரிவினை ஏற்பட்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

PANDY R

Digitally signed by PANDY R
Date: 2026.03.10 17:34:32 +0530